**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No.278/2018**

**Prosecution witness. No : 7**

| | |
|---|---|
| **Name** | **: சங்கீதா** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(All Accused Present. Counsel present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 28.04.2025.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:-</u>

1) நான் வீரகனூர் கிழக்கு வீதியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். உள்ளூர் தான். அ.சா.1, 2, 3 அவர்களை தெரியுமா என்றால் தெரியும். அவர்களும் உள்ளூர் தான். நான் சம்பவத்தை பார்க்கவில்லை. அ.சா.1- யின் தம்பி மனைவி தான் நான். எனக்கு சம்பவம் பற்றி தெரியாது. ஆஜர் எதிரிகள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

1) 18.12.2017ம் தேதி காலை 10.30 மணிக்கு அங்குசாமி மகன் சக்தி உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்காக அங்குசாமி வீட்டில் இருந்து வெளியே வரும் போது மேற்படி தன்ராஜ் அவர் சாப்பிட்ட எச்சில் தண்ணீரை அங்குசாமி மீது ஊற்றினார் என்றும், அதற்கு ஏன் எச்சில் தண்ணீரை என் மீது ஏன்

ஊற்றினார் என்று கேட்டார் என்றும், அப்போது கெட்ட வார்த்தையால் தேவிடியா பையன் என்று கூறி ஒரு இரும்பு பைப்பை எடுத்து அங்குசாமியனி தலையில் ஓங்கி அடித்தார் என்றும், அப்போது அங்குசாமிக்கு பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும், தனராஜ் தம்பி மாசிமலை ஒரு உருட்டு கட்டையால் அங்குசாமியின் முதுகிலும் இடுப்பிலும் முழங்காலில் அடித்தார் என்றும், சிலம்பரசி இந்த தேவிடியா பையனை உயிருடன் விடாதீர்கள் என்று கூறி செருப்பால் கன்னத்திலும், தலையிலும் அடித்தார் என்றும், அப்போது மேற்படி கண்ட எதிரிகள் அங்குசாமிக்கு ரத்தம் வருவதை பார்த்துவிட்டு செத்து போடா என்று கூறிவிட்டு அங்கு இருந்து ஓடி விட்டார்கள் என்றும், நான் அங்குசாமியை 108 வண்டியில் ஏற்றி ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு மேற்படி விவரத்தை பார்த்ததாக போலீசில் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பதாலும், எங்கள் சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதாலும், அவர்களை காப்பாற்ற வேண்டி சம்பவத்தை பார்க்கவில்லை என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-இல்லை.**

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.28 18:26:06 +0530

**Assistant Session Judge,**
**Attur.**